**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30.07.2021 வெள்ளிக் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.பி.செங்குட்டுவன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 01 | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜூலை-2021 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | 339 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| 02 | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனத்திற்கு வாகன காப்பீடு (Insurance) 2021-2022-ம் ஆண்டுக்கு The Oriental Insurance, திருத்துறைப்பூண்டி நிறுவனத்தில் த.நா.50AT-8929 (TATA ACE)க்கு ரூ.24000/- (ரூபாய் இருபத்தி நான்காயிரம் மட்டும்) செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்<br>**2.** நகராட்சியின் நலன் கருதியும், பொதுசுகாதாரம் பயன்பாட்டிற்குரிய வாகனம் நிர்வாக நலன் கருதியும் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 1077/2021/எச்1)** | 340 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **03** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு பயன்பாட்டு வாகனத்திற்கு வாகன காப்பீடு (Insurance) 2021-2022-ம் ஆண்டுக்கு The Oriental Insurance, திருத்துறைப்பூண்டி நிறுவனத்தில் த.நா.50AT-8955 (TATA ACE)க்கு ரூ.24000/- (ரூபாய் இருபத்தி நான்காயிரம் மட்டும்) செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** அனுமதிக்கலாம்<br><br>**2.** நகராட்சியின் நலன் கருதியும், நிர்வாக நலன் கருதியும் பொதுசுகாதாரப் பயன்பாட்டிற்குரிய வாகனம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 1117/2021/எச்1)** | **341** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| **04** | திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதியில் கோவிட்–19 கொரோனா வைரஸ் இரண்டாவது அலை காரணமாக 10.05.2021 முதல் ஊரடங்கு நிலை அரசினால் அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டதால் பொதுமக்களுக்கு நகராட்சி மூலம் காய்கறி விற்பனை செய்ய ஒலிப் பெருக்கி வாயிலாக பொது மக்களுக்கு அறிவிப்புகள் செய்ய செலவினம் ரூ.49,500/-க்கு மன்ற ஒப்புதல் வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம்அனுமதிவழங்கலாம்.<br><br>**2.** பணியின்அவசரஅவசியத்தைமுன்னிட்டுதமிழ்நாடுநகராட்சிகள்சட்டம்பிரிவு15ன் கீழ் பணியினை மேற்கொண்ட | **342** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>இவ்வலுவலக நடவடிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>(ந.க.எண் 1032/2021/இ1)</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>05</td>
<td>இந்நகராட்சியின் CWSS மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி மற்றும் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் குளோரினேஷன் செய்வதற்கான சோடியம் ஹைபோகுளோரைடு திரவம் வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மான எண்.947 நாள்.03.05.2021 இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 09.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளிமதிப்பீடு</th><th>ஒப்பந்தப்புள்ளிதொகை</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.தனலெட்சுமிகெமிக்கல்ஸ், சென்னை</td><td>4,98,550.00</td><td>4,97,250.00</td><td>0.26சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/S.வள்ளிடிரேடர்ஸ், நாகப்பட்டினம்</td><td></td><td>5,33,000.00</td><td>6.00சதவீதம் அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.26சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.தனலெட்சுமி கெமிக்கல்ஸ், சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி</td>
<td>343</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>**(ந.க.எண் 947/2021/இ1)** | | |
| **06** | தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூரில் நகராட்சியில் பணியாற்றும் இளநிலை உதவியாளர்கள்/ வருவாய் உதவியாளர்களுக்கான விரிவாக்க பயிற்சி (Batch-I) 02.08.2021 முதல் 27.08.2021 வரை நடைபெற உள்ளதில் இந்நகராட்சி வருவாய் உதவியாளர் திருமதி.வி. அந்தோனி ஆஞ்சலா என்பவரை அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. மேலும், பயிற்சியில் பங்கேற்கும் மேற்கண்டுள்ள நபருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகள் மேற்கண்டுள்ள நிறுவனத்தின் மூலம் செய்துக்கொடுக்கப்பட்டுள்ளதால் அதற்கான கட்டணம் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 20 நாட்களுக்கு ரூ.20000/- தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் என்ற பெயருக்கு கோயம்புத்தூரில் மாற்றத்தக்க வகையில் "கேட்பு வரைவோலையாக" எடுத்து அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்டுள்ள தொகை ரூ.20000/- தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** ஒப்புதல் வழங்கப்படுகிறது.<br>**2.** மேற்கண்டுள்ளதொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.<br>**(ந.க.எண் 833/2021/சி1)** | **344** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |
| **07** | அரசாணை (நிலை) எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.10.1997ன்படி நகராட்சியில் பணிபுரியும் வாகன ஓட்டுநர்கள் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணியாற்றி முடித்தவர்களுக்கு "தங்கப்பதக்கம் " வழங்க இந்நகராட்சி திரு.மு. சிற்றரசன் ஓட்டுநர் என்பவரை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24817/ஜே3/2020 நாள் 13.07.2021 மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்டுள்ள தங்கப் பதக்கம் | **345** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |

| | | | |
|---|---|---|---|
| | தயார் செய்ய ஆகும் செலவினத் தொகையினை சம்மந்தப்பட்ட நகராட்சிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தங்கப்பதக்கம் தயார் செய்து வழங்க THE TAMIL NAU HANDICRAFTS DEVELOPMENT CORPORATION LIMITED, CHENNAI நிறுவனம் 25500/-க்கு தங்கள் நிறுவனத்தின் பெயரில் வங்கி வரைவோலை அனுப்ப கேட்டு விலைப்புள்ளி அனுப்பியுள்ளது. எனவே, மேற்கண்டுள்ள தொகை ரூ.25500/-ஐ மேற்கண்டுள்ள நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.,<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**2.** மேற்கண்டுள்ளதொகை ரூ.25500/-யை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்துகொள்ளலாம்.<br>**(ந.க.எண் 157/2021/சி1)** | | |

| | | | |
|---|---|---|---|
| **08** | இந்நகராட்சியின் 2020-2021ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**2.** நிர்வாக அறிக்கைச ஜெராக்ஸ் எடுக்கவும், பைண்டிங் செய்யவும், உத்தேச செலவினம் ரூ.6000/-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**3.** மேற்கண்டுள்ள செலவினை இந்நரகாட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>**<u>(ந.க.எண் 1434/2021/சி1)</u>** | **346** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |
| **09** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ள வருவாய் துறைக்கு சொந்தமான அடிமனை புல எண் 132-க்கான ஆண்டு குத்தகை தொகை ரூ.17648/-ஐ 2021ஆம் ஆண்டுக்கு (பசலி எண் 1431/2021) வட்டாட்சியர் திருத்துறைப்பூண்டி அவர்களுக்கு செலுத்த ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதி வழங்கலாம்.<br><br>**2.** 20.03.1990 முதல் 30 வருடங்கள் குத்தகைக்கு பெறப்பட்டு 20.03.2020 உடன் 30 வருடங்கள் முடிவடைந்துவிட்டதால் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 61-ன்படி புறம்போக்கு இடத்தினை குத்தகையில்லாமல் நகராட்சி பயன்பாட்டில்விட தனிய மன்ற பொருள் வைத்து மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களிடம் அனுமதி கோரலாம்.<br><br>**3.** மேற்கண்டுள்ள செலவினை இந்நரகாட்சி பொது நிதியில் | **347** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண் 2822/1998/எப்1)** | | |
| **10** | இந்நகராட்சியின் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணி தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதன் ஒப்பந்தக் காலம் 30.09.2021ல் நிறைவு பெறுவதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் பணியாளர் அளவு கோள்படி கூடுதலாக தேவைப்படும் 51 தூய்மை பணியாளர்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11609/2016/பி3 நாள் 17.11.2017ன் தனியார் பங்களிப்புடன் (Outsourcing) முறையில் அமர்த்திட திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி (அல்லது) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மாநில அளவில் நிர்ணயித்து தரவுள்ள விலை விகிதப்படி (தினக்கூலி) பணி மேற்கொள்ளவும். ஊதியத்துடன் பணியாளர் சேமநலநிதி, ஆயுள்காப்பீடு, சீருடை மற்றும் இதர உபகரணங்கள் மற்றும் அனைத்தும் சேர்த்து மதிப்பீடு தயார் செய்து அதன் அடிப்படையில் இப்பணிக்கான மொத்த மதிப்பு (Total Value of Work) இறுதி செய்து கொள்ளலாம். இப்பணிக்கான அதிகபட்ச மதிப்பீடு ஒரு வருடத்திற்கு தொகை ரூ.106.00இலட்சம் (ரூபாய் நூற்றியாறு இலட்சம் மட்டும்)ஆகும், மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.10.2021 முதல் 30.09.2022 வரை தனியார் பங்களிப்புடன் நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் வழங்கியுள்ள அனுமதியின்படி 51 தூய்மை பணியாளர் எண்ணிக்கை நபர்களை பணியில் அமர்த்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளவும், விளம்பரம் செய்திடவும் அதற்கான செலவினம் மன்றம் அனுமதிக்கலாம். | **348** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |

<table>
<tr><td></td><td><u>(ந.க.எண்.1358/2021/எச்1)</u></td><td></td><td></td></tr>
<tr><td>11</td><td>இந்நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ்-II தடுப்பு நடவடிக்கை தொற்று பாதுகாப்பு பணிக்கு பொதுசுகாதாரம் பிரிவிற்கு தேவையான வகையில் கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு 25.06.2021ல் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை<br>ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>எழில் எண்டர்பிரைஸ்ஸஸ்,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>161450/-</td></tr>
<tr><td>2.</td><td>எஸ்.மங்கையர்கரசி,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>177895/.</td></tr>
<tr><td>3.</td><td>அன்பு எண்டர்பிரைஸ்ஸஸ்,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>181400/-</td></tr>
</table><br>
1. மேற்படி வரப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் எழில் எண்டர்பிரைஸ்ஸஸ், திருத்துறைப்பூண்டி என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br><br>
2. குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்திற்கு கொரோனா தொற்று நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கலாம்.</td><td>349</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.<br><br><u>(ந.க.எண் 740/2020/எச்1)</u></td><td></td><td></td></tr>
<tr><td>12</td><td>இந்நகராட்சிப் பகுதியில் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் நோய் தடுப்பு பணிக்கு பொதுசுகாதாரம் பிரிவிற்கு தேவையான வகையில் கிருமி நாசினி (மற்றும்) முகக் கவசம் கிளவுஸ் வாங்குவதற்கு .08.2021ல் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. பணியின் அதிகபட்ச மதிப்பு ரூ.75000/- ஆகும்.<br><br><table><tr><td rowspan="3">வ.எண்.</td><td rowspan="3">நிறுவனத்தின் பெயர்</td><td>கிளவுஸ்</td><td>மாஸ்க்</td></tr><tr><td colspan="2">ஒன்றின் விலை</td></tr><tr><td>ரூ.</td><td>ரூ. பை.</td></tr><tr><td>1.</td><td>பரிஷித் டிரேடர்ஸ்,<br>3/10. கீழ தேவதான<br>ம்,<br>திருச்சிராப்பள்ளி</td><td>120.00</td><td>4.29</td></tr><tr><td>2.</td><td>கமலா டிரேடர்ஸ்,<br>2. கீழ தேவதானம்,<br>ரயில்வே ஸ்டேஷன் அருகில்,<br>திருச்சி-2.</td><td>135.00</td><td>4.80</td></tr></table></td><td>350</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3.</td><td>ஆர்.எஸ்.ஏ.டிரேட்ர்ஸ்,<br>76/12. சுண்ணாம்புகாரத் தெரு, திருச்சி-2</td><td>140.00</td><td>5.10</td></tr>
</table>

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி வரப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் உள்ள பரிஷித் டிரேடர்ஸ் 3/10.கீழ தேவதானம், திருச்சி-2 என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்திற்கு கொரோனா தொற்று நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கலாம். உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

**<u>(ந.க.எண் 740/2020/எச்1)</u>**
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>13</td>
<td>
இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் த.நா.50எல்-7339 டிப்பர் லாரி வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள பகுதுகளை சீர்செய்து தருவதற்கு அரசு அங்கீகாரம் பெற்றுள்ள ஆட்டோ ஒர்க்ஸ் ஷாப் நிறுவனத்திடமிருந்து 30.03.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில்வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

<table>
<tr><th rowspan="2">வ.எ.</th><th rowspan="2">பணியின் விவரம்</th><th colspan="3">விலை விபரம்</th></tr>
<tr><th>தருமராஜ் ஆட்டோ</th><th>அன்னை சத்யா இஞ்சினியரிங்</th><th>குரு ஆட்</th></tr>
</table>
</td>
<td>351</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | கேரேஜ் | ஒர்க்ஸ், திருவாரூர் | டோ கேரேஜ் திருவா ரூர். |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | சஸ்பென்சன் ஓவராயிலிங் கிங்பின் (இடது/வலது) | 16000 | 16800 | 17200 |
| 2. | நான்கு வீல் கிரிஸ் பேக்கிங் செய்தல் | 6000 | 6200 | 6800 |
| 3. | நான்கு வீல் பிரேக் ஓவராலிங் செய்தல் | 10800 | 11500 | 16800 |
| 4. | ரேடியேட்டர் ஓவராலிங் செய்தல் | 3050 | 3200 | 3500 |
| 5. | ஏர் பில்டர்/டீசல் பில்டர் மாற்றுதல் | 5320 | 6000 | 5400 |
| 6. | ஏர்லீக் செய்தல் | 5000 | 5200 | 1800 |
| 7. | டீசல் பேங்க் கிரிங் செய்தல் | 1280 | 1500 | 9100 |
| 8. | பேட்டடரி மாற்றுதல் | 12500 | 13500 | 13800 |
| 9. | பிரிண்ட் ராக்சட்டு 2 எண்ணிக்கை மாற்றுதல் | 8000 | 8600 | 8500 |
| 10. | ஏர் டியூப் சிரியது மாற்றுதல் | 2250 | 2400 | 2600 |
| | கூடுதல் | 70200 | 74900 | 84500 |

**அலுவலக குறிப்பு:**

**1.** மேற்படி வரப்பட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் திருவாரூர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**2.** மேற்படி வாகனப் பயன்பாட்டினை கருத்தில்கொண்டும் வாகனத்திற்கும் தகுதிச் சான்று உடன் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி அவசர

<table>
<tr>
<td></td>
<td>அவசியம் கருதி ஆணையர்/ தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திருவாரூர் தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண் 122/2021/எச்1)</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>14</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் த.நா.50எல்-7339 டிப்பர் லாரி வாகனத்திற்கு அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் பொதுமக்களுக்கும் பொதுசுகாதாரப் பிரிவிற்கும் பயன்பாட்டிற்கு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் 30.03.2021-ல் விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்டுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எ.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை கூடுதல் ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தருமராஜ் ஆட்டோ கேரேஜ்</td><td>70200/-</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், திருவாரூர்.</td><td>74900/-</td></tr>
<tr><td>3.</td><td>குரு ஆட்டோ கேரேஜ் திருவாரூர்.</td><td>84500/-</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
மேற்கண்டுள்ள விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1-ல் உள்ள தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் திருவாரூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை எற்று இந்நகராட்சி பராமரிப்புக்கு வாகனத்தினை பயன்படுத்திட மன்றம் ஏற்கலாம்.<br>
<u>(ந.க.எண் 122/2021/எச்1)</u></td>
<td>352</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **15** | இந்நகராட்சியின் நவீன எரிவாயு தகன மேடை பணி நிறைவுற்று பணி பரிசோதனை ஓட்டம் செய்ய வேண்டிய நிலையிலுள்ளது. தற்போது (கோவிட்-19) இரண்டாவது அலை காரணமாக அடிக்கடி ஏற்படும் உயிர் இழப்புகளை இதுபோன்ற மயானத்தில் இறுதி சடங்கு செய்ய சகாதாரத் துறை அறிவிறுத்தி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், சுகாதாரத் துறை, மருத்துவ உயர் அதிகாரிகள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் (கோவிட்-19)-ன் காலத்தில் மேற்படி தகன மேடையை உடன் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும்படி அறிவுறுத்தியுள்ளார்கள்.<br><br>எனவே, தற்போது பரிசோதனை ஓட்டம் திருப்திகரமாக முடித்துள்ள நிலையில் தனியார் ஒருவரிடம் பராமரிப்பு பணி ஒப்படைப்பு செய்யப்படும் வரை நான்கு மயான பணியாளர்கள் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 2020-2021ஆம் ஆண்டின் ஊதிய விபரப்படி உதியம் வழங்கிட ரூ.200000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதிநகராட்சியின் விதிகள் 1920ன் பிரிவு 15ன்படி கோவிட்-19ன் இரண்டாவது அலை காரணமாக நான்கு மயான பணியாளர்கள் ஊதியம் வழங்கிட பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>(ந.க.எண் 1482/2020/எச்1)</u>** | **353** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| **16** | இந்நகராட்சிப் பகுதியில் கோவிட்-19 இரண்டாம் அலை தீவிரமாக பரவி வருவதால் வார்டுகளுக்கு ஒரு நபர் நியமித்து காய்ச்சல் அளவு ஆக்ஸிஜன் அளவு மற்றும் கொரோனா இரண்டாம் அலை சம்மந்தமான அறிகுறி ஏதேனும் உள்ளதா என ஆய்வு செய்து அவர் தொடர்பான விபரங்களை | **354** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | திருத்துறைப்பூண்டி வட்டார மருத்துவ அதிகாரியிடம் தெரிவிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் ஆய்வு கூட்டத்தின்போது வலியுறுத்தினர்.<br><br>இதன்படி ஏற்கனவே இப்பணியில் பகுதி நேரமாக ஈடுபட்டுவரும் (Animator's) ஆறு நபர்களுடன் கூடுதலாக நான்கு நபர்கள் நியமித்து காய்ச்சல் மற்றும் ஆக்ஸிஜன் அளவு காணும் பணி நகராட்சிப் பகுதியில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள இப்பணி கொரோனா தடுப்பு ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் வரை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இப்பணியினை ஜுன் –2021 முதல் செப்டம்பர்-2021 வரை நான்கு மாதத்திற்கு மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.200000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br><br>**2.** பணியின் அவசர அவசியம் கருதிநகராட்சியின் விதிகள் 1920ன் பிரிவு 15ன்படி கோவிட்-19ன் இரண்டாவது அலை காரணமாக நான்கு பணியாளர்கள் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 2020-2021ஆம் ஆண்டின் ஊதிய விபரப்படி உதியம் வழங்கிடவும், பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 1485/2020/எச்1)** | | |
| **17** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு15வது மத்திய நிதிக்குழு பரிந்துரைகளின்படி (2020-2021) அடிப்படை பணிகள் மேற்கொள்ள திட்டத்தில் இரண்டாவது நிதியாக ரூ.37,73,443/- ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 செயல்முறைகளின்படி (ROC.NO.7979/2020/LA3, Dt:30.06.2021)நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. இதன்படி இந்நகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான மன்ற ஒப்புதல் வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது. | **355** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு-16 வேதாரண்யம் சாலையில் உள்ள நவீன எரிவாயு தகன மேடைக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி | 9.00 |
| 2 | வார்டு–16 வேதாரண்யம் சாலையில் உள்ள உரக்கிடங்கு வளாகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி | 8.10 |
| 3 | வார்டு-1 மன்னை சாலையில் ஜே.கே.ஆர். கார்டன் பகுதியில் 30,000லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி | 6.00 |
| 4 | வார்டு-1 மன்னை சாலை ஜே.கே.ஆர். கார்டன் பகுதியில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி மற்றும் பம்ப் அறை கட்டும்பணி | 4.40 |
| 5 | வார்டு-6 அரியலூர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் 20,000லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி | 5.00 |
| 6 | வார்டு-24 பள்ளிவாசல் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு சோடியம் ஹைபோ குளோரைடு திரவம் செலுத்தும் இயந்திரம் அமைக்கும் பணி | 2.45 |
| 7 | பேருந்து நிலையம் அருகில் உள்ள CWSS மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு சோடியம் ஹைபோகுளோரைடு திரவம் செலுத்தும் இயந்திரம் அமைக்கும் பணி | 2.45 |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>8</td><td>பேருந்து நிலையம் அருகிலுள்ள CWSS மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரோட்டம் அளவீடு செய்யும் கருவி பொருத்தும்பணி</td><td>0.40</td><td></td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>37.80</td><td></td></tr>
</table>
அலுவலககுறிப்பு: மன்றம்அனுமதிவழங்கலாம்<br>
<u>ந.க.எண்.31/2021/இ1</u>
</td><td></td><td></td></tr>
<tr><td>18</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சி வேதாரண்யம் சாலையில் உள்ள நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி அரசின் உள்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்பு நிதி 2016-17 (IGFF) திட்டத்தின்கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான சோதனை ஓட்டம் 19.05.2021 அன்று மேற்கொள்ளப்பட்டு திருப்திகரமான முறையில் இயங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.<br>
எனவே, மேற்படி நவீன எரிவாயு தகன மேடையை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்காக அறக்கட்டளை/தொண்டு நிறுவனம்/தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் இது சம்மந்தமான விளம்பரங்கள் வெளியிடுவதற்கும் ஏற்படும் செலவினத்தை நகராட்சி நிதியின்கீழ் ஈடுசெய்து கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>356</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>2. இப்பணிக்கு ஏற்படும் செலவினத்தை நகராட்சி பொது நிதியின்கீழ் சரி செய்து கொள்ளலாம்.<br><br><u>ந.க.எண்.1482/2021/எச்1</u></td><td></td><td></td></tr>
<tr><td>19</td><td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வாராந்திர வரி வசூல் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சி வரியினங்கள் வசூலை தீவிரப்படுத்தும் பொருட்டு வரி விதிப்புதாரர்களுக்கு சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் ஆகியவற்றிற்கான கேட்பு அறிவிப்பு நோட்டீஸ் சார்வ் செய்ய வேண்டி அச்சிட்டு வழங்கிட ஒரு நகல் ஒன்றுக்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட அச்சக நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கலாம்.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விலைப்புள்ளி கொடுத்த நிறுவனம் விபரம்</th><th>ஒரு நகல் ஒன்றுக்கான விலைப்புள்ளி ரூ. பை.</th></tr>
<tr><td>1.</td><td>வீரா கம்யூட்டர்ஸ்</td><td>2.50</td></tr>
<tr><td>2.</td><td>ஜோதீஸ் கம்யூட்டர்ஸ்</td><td>1.50</td></tr>
<tr><td>3.</td><td>சாமி சிஸ்டம்ஸ்</td><td>3.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>1. அனுமதி வழங்கலாம்.<br>2. குறைவான விலைப்புள்ளி அளித்த ஜோதீஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.<br><u>(நக.1819/2020/அ1)</u></td><td>357</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

ஒம்/ பி.செங்குட்டுவன்,
ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/